**திருப்பள்ளியெழுச்சியின் பிறப்பு**

இதற்கு முந்தய பிரபந்தத்தில்(**திருமாலை**), ஆழ்வார் சம்சாரத்தில் உழன்று

பற்பல சோதனைகளை எதிர்கொண்டு, பின்னர் பெருமாளின் அருள் பெற்று

\அவைகளில் இருந்து மீண்டு, அதனால் தான் பெற்ற பகவத் அனுபவத்தையும்

, பாகவத அனுபவத்தையும் பெருமையுடன் சொல்லிக்கொண்டே பெருமாளை

தரிசிக்க ஆனந்தமாக சென்றார். ஆயினும் பெருமாள் கண் குளிர நோக்குதல்,

கைகளை நீட்டி அணைத்துக் கொள்ளுவது என்று ஒன்றும் செய்யாமல்,

கண்களை மூடி பள்ளிகொண்டு இருந்தார். பெருமாள், கண்களை

மூடிக்கொண்டு இருந்ததற்கு, சம்சாரிகள் போல் சோம்பேறித் தனமாகவோ,

ஆழ்வாரிடம் அன்பு இல்லாமையிலோ இல்லை என்றும், கொடிய நிலையில்

இருந்த ஆழ்வாரை மீட்டு தன் பக்கம் கொண்டு வந்த தன் பெருமையை

நினைத்துக்கொண்டும், அதே போல் எப்படி இந்த உலகத்தில் உள்ள மற்ற

ஜீவாத்மாக்களையும், தன் பக்கம் வரவழைப்பது என்றும் சிந்தித்துக்கொண்டு

"***நாகமிசைத் துயில்வான் போல் உலகெல்லாம் நன்கு ஒடுங்க, யோகு***

***அணைவான்***” (4.8.9) என்றபடி இருக்கிறார் என்றும் நம் உரையாசிரியர்கள் அழகாகக் கூறுவார்கள்.

**முதல் பாசுரம்**

பழைய காலத்தில், மஹாராஜாவிற்கு பொழுது புலர்ந்ததை தெரிவிக்க சந்தியா

தீபம் கொண்டு வருவதைப்போல, சூரியன் தன்னுடைய கிரணங்களை, பெருமாளுக்கு

பொழுது புலர்ந்ததை தெரிவிக்க, உதயகிரி மலையின் உச்சியில், குன்றின் மேல்

இட்ட விளக்கு போல் தன் கைங்கரியத்தை சமர்ப்பிக்க வந்தான். சூரியனை விளக்கு

என்று **முதல் திருவந்தாதி** முதல் பாட்டில், பொய்கை ஆழ்வார்,

“***வெய்ய கதிரோன் விளக்காக***” என்று கூறிப்பிட்டதை நினைவில் கொள்ளவும்.

இன்னொரு சுவாரசியமான இடம், “ஆதித்யனுக்கு அருகில் கோவில்”

என்று சொல்வதன் மூலம், தெற்கு நோக்கி பள்ளிகொண்டு இருக்கும்,

பெரியபெருமாளின் திருவடிகளின் தரிசனம் காண கிழக்கு திசையில்

சூரியன் உதித்தான் என்று சொல்வது பொருத்தமே. பெரிய பெருமாளின்

திருவடிகள் ஸ்ரீரங்கம் கோவிலில் இருந்து கிழக்கு நோக்கி நீண்டு உள்ளதை இன்றும்,

ஒவ்வொரு தெருவிலும் உள்ள கிழக்கு வாசலிலும் அவனது திருவடிகள் இருப்பதைக்

காணலாம். மேலும் அமலனாதிபிரான் என்ற பிரபந்தத்தில், திருப்பாணாழ்வார்

“*நீள் மதிள் அரங்கத்தம்மான் திருக் கமலபாதம் வந்து என் கண்ணில் உள்ளன*”

என்றுபெருமாளின் பாதங்கள் நீள்வதைப் பற்றி கூறுவதையும் நினைவு கொள்ளலாம்.

இதனைத் தொடர்ந்து, பெருமாளின், திருமுடியிலும், திருவடியிலும் ஆதித்யர்கள்

இருப்பதையும் அவர்களுக்கு இடையில், அவர் கண் வளர்ந்து (உறங்கிக் கொண்டு)

இருப்பதையும் நயமாக எடுத்து சொல்கிறார். திருமுடியில், அல்லது அவன்

அணிந்து இருக்கும் கீரிடத்தில், ஆயிரம் ஆதித்யர்கள் இருப்பதை, பெரியாழ்வார்,

” ***கதிர் ஆயிரம் இரவி கலந்து எரித்தால் ஒத்த நீள்முடியன்***

“(பெரியாழ்வார் திருமொழி 4.1.1) என்று சொல்வது மேற்கோளாகிறது.

மேலும் சில பாசுரங்கள்

- பேயாழ்வார் “***முடிவண்ணம், ஓர் ஆழி வெய்யோன் ஒளி***”
- (மூன்றாம் திருவந்தாதி, 1.5)
- நம்மாழ்வார் “***மிக்க செஞ்சுடர்ப் பரிதி சூடி*** ” (திருவாசிரியம், 1)

இந்திரன், குபேரன் என்னும்படியான பல தேவர்களும் மற்றும்

அரசர்களும், தாம் முதலில் பெருமாளின் திருவடி வணங்குவதற்கும்,

தங்கள் பதவி நிலைத்திடவும், நேரம் தவறாமல் எதிர் திசையில்

வந்து காத்து இருந்தனர்

ஆகையால் தேவரீர் எழுந்து அருள வேண்டும் என்பது கருத்து.

**இரண்டாம் பாசுரம்**

கிழக்கு திசையில் இருந்து வீசும் காற்றானது, முல்லை கொடிகளில் மலர்ந்து

கொண்டு இருக்கும் முல்லை மலர்களை தழுவிக் கொண்டு அதன் வாசத்தினால்

பெருமாளுக்கு பொழுது புலர்ந்ததை தெரிவிக்கின்றது

அன்று கஜேந்திர ஆழ்வான் என்னும் யானையை, கொடிய ஆபத்தில் இருந்து வேகமாக

வந்து காப்பாற்றியது போல், அடியோங்களையும் காக்க விரைவில் கண் வளர

வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்.

**மூன்றாம் பாசுரம்**

முதற்பாட்டில், கதிரவன் உதயகிரி சிகரத்திலே வந்து சேர்ந்தான் என்றது. இப்பாட்டில்

நேராக உதித்துத் தனது ஒளியை எல்லா திசைகளிலும் பரப்பிக்கொண்டு

இருளை நீக்கிக் கொண்டு இருந்தான் என்கின்றது.

நட்சத்திரங்களும் அவைகளின் அதிபதியான சந்திரனும் ஒளி இழந்தன

என்பதை நம் உரையாசிரியர்கள், நட்சத்திரங்களும், சந்திரனும்

வேற்று உரு கொண்டன என்பார்கள்.

பாக்குச் சோலைகளில் மடல் விரிந்து, பாளைகள் வாசனையை அளித்ததால்,

விடியற்காலை காற்று அவற்றினை சேர்த்துக் கொண்டு, பொழுது புலர்ந்ததை

தெரிவிக்கிறது. இந்த பாசுரத்தில், "***வண் பாளைகள்***" என்று ஆழ்வார் கூறுகிறார். வண் என்றால் ஔதார்யம் – தன்னிடத்தில் உள்ளதை மற்றவர்களுக்கு கொடுத்து உதவுவது.

இங்கு பாளைகள் தன்னிடம் உள்ள வாசத்தை காற்றுக்கு மறுக்காமல்

கொடுப்பது என்று கூறுவது அழகே.

எல்லாவிதமான எதிரிகளையும் அழிக்கவல்ல, மிக ஒளியுடன் விளங்கும்

சக்கரத்தாழ்வானை கையில் ஏந்தி இருக்கும் பெருமாளின் அழகை

அடியவர்கள் காண எழுந்தருள வேண்டும் என்று ஆழ்வார் வேண்டுகிறார்.

**நான்காம் பாசுரம்**

எருமைக்கன்றுகளை மேய்ச்சலுக்காகக் கட்டவிழ்த்து விடுவதற்காக

இடையர் ஊதுகிற புல்லாங்குழலோசையும், எருதுகளின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள

மணிகளின் ஒலியும் எல்லா திசைகளிலும் பரவின.

முந்தைய நாள் மாலை பொழுதில் மது பானத்திற்காக சோலை, வயல், மற்றும்

உள்ள நீர்நிலைகளில் உள்ள தாமரை மலர்களினுள் புகுந்த வண்டுகள், சூரியன்

மறைய, மலர்கள் தன் இதழ்களை மூடிக் கொள்ள, இரவெல்லாம் அவைகளுக்குள்

கிடந்து வருந்தி காலையில் மலர்களின் இதழ்கள் விரிய, வண்டுகள் ஆரவாரம்

செய்து, வெளியே கிளம்பின என்று நயம்பட கூறுகிறார்.

தேவர்களின் காரியமும் விசுவாமித்திரர் போன்ற முனிவர்களின்

வேள்விகளையும் காப்பதற்கு அசுரர்களையும், எதிரிகளையும் அழித்த, அயோத்திக்கு

அதிபதியான பெருமாளுக்கு தாங்கள் கைங்கர்யம் செய்ய வேண்டும் என்றும்

அதற்காக பெருமாள் எழுந்தருள வேண்டும் என்று ஆழ்வார் வேண்டுகிறார்.

விச்வாமித்ரரை முனி என்று கூறாமல், ***மாமுனி*** என்று கூறியதை, முன் ஒரு

காலத்தில், வேறு மாதிரி இருந்து, பின்னாளில், ஸ்ரீ ராமனின் தயவு வேண்டி தசரதனிடம்

சென்றதும், ஸ்ரீ ராமனுக்காக "***கௌஸல்யா சுப்ரஜா ராம பூர்வா***" என்று பாடி அவரை

தினமும் எழுப்பியதும், ஆழ்வார் தனது வாழ்க்கையுடன் ஒப்பிட்டு, தானும் இந்த

உலகத்து சுகங்களில் மயங்கி இருந்து, பெருமாளின் அருளால், மயர்வற மதிநலம்

அருள பெற்று, விப்ரநாராயணராக இருந்தவர் தொண்டரடிப்பொடி ஆழ்வாராக

மாறியதும், அவருக்கு திருப்பள்ளியெழுச்சி பாடுவதையும் சுவாரசியமாக

உரை ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

**ஐந்தாம் பாசுரம்**

நான்காம் பாசுரத்தில், வயற்காடுகளில் வண்டுகள் விடிந்ததை உணர்ந்தது

கூறப்பட்டது; இந்த பாசுரத்தில், பறவைகளும் பொழுது புலர்ந்தது

உணர்ந்தமை கூறப்படுகின்றது.

முதலில் வண்டுகளைப்பற்றி சொல்லி, பிறகு பறவைகளைப்பற்றி சொன்னதால்,

பறவைகள், வண்டுகளைவிட அதிகம் உறங்க ஆசை கொண்டவை என்று ஆழ்வார்

சொல்கிறார். அதை **வயலுள் வண்டுகள் உணர்ந்தது** பக்திமான்களின் உணர்வு

போன்றது என்றும் இந்த பாசுரத்தில் சொன்ன, **பறவைகள் உணர்ந்தது**, உறங்குவதற்கு

அதிக ஆசை உள்ள சம்சாரிகள் போன்றது என்றும் பெரியவாச்சான்பிள்ளை என்ற

ஆச்சாரியார் தனது உரைகளில் கூறி உள்ளார்.

"***இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்***" என்று சொன்னது, விபீஷணன் வழிபட்ட

பெருமாள் என்றும் விபீஷணனுக்கு, (***பங்குனி உத்திர ப்ரம்மோத்ஸவம்***) பகவத்

கைங்கரிய அனுபவம் கொடுத்தது போல், தனக்கும் கைங்கர்ய பிராப்தி அருள

ஆழ்வார் வேண்டுகிறார்.

இந்த பிரபந்தத்தில் உள்ள எல்லா பாசுரங்களிலும் "***அரங்கா***", "***பள்ளி எழுந்தருளாயே***"

என்று பாடிய ஆழ்வார் இந்த ஒரு பாடலில் மட்டும்

"***இலங்கையர் கோன் வழிபாடுசெய் கோயில்***" என்று திருவரங்க

திவ்யதேசத்தைக் குறிப்பிட்டு இருப்பது விபீஷணனுக்குச் சேர்க்கும் மற்றொரு பெருமையே ஆகும்.

**ஆறாம் பாசுரம்**

பன்னிரண்டு தமிழ் மாதங்களுக்கும் ஒவ்வொரு பெயர் கொண்ட

ஆதித்யர்கள்(சூரியன்), பதினொன்று ருத்திரர்கள் (சிவன்) , தேவர்களுக்கு

சேனாதிபதியான ஷண்முகக் கடவுள், எம கிங்கரர்கள், எட்டு வசுக்கள்

மற்றும் பற்பல தேவதைகள், அவர்கள் எல்லோருடைய பரிவாரங்கள்,

பெருமாள் திருக்கண் மலர்வதை முதலில் தரிசிக்க திரண்டு வந்து உள்ளார்கள்.

ஆகவே தாங்கள் எழுந்து அருள வேண்டும் என்று ஆழ்வார் வேண்டுகிறார்.

இந்த பாசுரத்தில் முதலில் ஆறுமுகன் என்று கூறி, பின்னர் குமரதண்டம்

என்று கூறுவது, முருகனின் ஆயுதத்தையும், அங்கு வந்துள்ள மற்ற

எல்லா தேவதைகளின் ஆயுதங்களையும் குறிக்கும் என்பது ஒரு பொருள்.

குமரதண்டம் என்பது எப்போதும் இளமையில் இருக்கும்

தேவர்களைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

**ஏழாம் பாசுரம்**

தேவலோகத்தில் இருந்து தேவர்களும், முனிவர்களும், எம கிங்கரர்களும், இந்திரன்

தன்னையுடைய ஐராவதம் என்னும் யானையுடனும், கந்தர்வர்கள் நெருக்கவும்,

வித்யாதரர்கள் தள்ளவும், இவர்களுடன் யக்ஷர்களும் சேர்ந்து பெருமாளுடைய

கோவிலின் வாசலில், பூமியிலும் ஆகாயத்திலும் இடம் இல்லாமல்

பெருமாளின் திருவடி தொழுவதற்காக மயங்கி நிற்பதால், தேவரீர் கண்

மலர்ந்து அருள வேண்டும் என்று ஆழ்வார் வேண்டுகிறார்.

**எட்டாவது பாசுரம்**

இந்த பாசுரத்தில், ஆழ்வார், பெருமாளின் திரு ஆராதனத்திற்கு எல்லா

பொருட்களும் தயாராக உள்ளது என்றும் சூரியன் தனது ஒளியை எல்லா

திசைகளிலும் பரப்பி இருட்டினை முற்றுமாக விலக்கி விட்டான் என்று

சொல்லி பெருமாளை திருக்கண் மலர வேண்டுகிறார். ***வம்பவிழ் வானவர்*** என்று சொன்னதை என்றும் இளமையுடன் இருக்கும்

வானவர் என்றும், அல்லது ***வம்பவிழ் வாயுறை*** என்று கொண்டு, வாசம்

மிகுந்த அருகம்புல் என்றும் கொள்ளலாம்.

**ஒன்பதாவது பாசுரம்**

குற்றமற்ற இசை வாத்தியங்கள் முழங்கின. குற்றமற்ற வாத்தியங்கள் என்பது நாதம்

நன்கு உண்டாகும் வாத்தியங்கள் என்பதாகும். இந்த வாத்யங்களுக்கு இணையாகப்

பாடவல்லவர்களும் மற்றும் வானத்தில் சஞ்சரிக்கும் தேவர்களும் மகரிஷிகளும், இந்த

பூவுலகில் சஞ்சரிக்கும் முனிவர்களும் சித்தர்களும் பெருமாளின் திருவடி தொழுவதற்கு

சிறியோர் பெரியோர் என்று வித்யாசம் பாராமல் நெருக்கத்தில் காத்து இருக்கின்றனர்

என்று ஆழ்வார் சொல்கிறார். ***நாளோலக்கம்*** என்று சொன்னது, காலையில் சிறந்த

சிம்மாசனத்தில், தன்னுடைய பெரிய பரிவாரங்களுடன் எழுந்தருளி எல்லோருக்கும்

தனது கருணையைப் பொழியும் சபை ஆகும்.

**பத்தாவது பாசுரம்**

இந்த பாசுரம், மேற்கூறிய எல்லோரையும் தவிர்த்து தான் பெருமாளுக்கும்

பாகவதர்களுக்கும்

சேவகன் என்று தோற்றும்படி பூக்குடலையும் தோளுமாக வந்து நிற்கின்ற அடியேனை

அங்கீகரித்தருள வேண்டும் என்ற பாடல்.

“***கூடையும் பொலிந்து தோன்றிய தோள்***” என்பதற்கு உரையாசிரியர் சொன்னது

, பெருமாளுக்கு சங்கும் சக்கரமும் அடையாளமாக இருப்பது போல், வனவாச

காலத்தில் லட்சுமணனுக்கு, மண்வெட்டியும், கூடையும் அடையாளமாக

இருந்தது போல், தொண்டரடிப்பொடி ஆழ்வாருக்கு பூக்குடலை ஆயிற்று

என்கிறார். லட்சுமணனை குறிப்பிட்டு சொல்வதற்கு காரணம், அவர் பகவத்

கைங்கர்யத்திற்கு மிகச் சிறந்த உதாரணம்.

ஸ்ரீ ராமனுக்கு சேவை செய்வதற்காகவே பிறந்த லக்ஷ்மணன், ஸ்ரீ ராமன்

கூடவே இருந்து, வனவாசம் சென்ற போதும், தான் மட்டும், அவர்கள்

கூடவே சென்று, யுத்தம் முடிந்து பட்டாபிஷேக காலத்தில் இராமனின்

வில்லையும் சேர்ந்து சுமந்து தொடர்ந்து தன் கைங்கர்யங்களை செய்தவன்

லக்ஷ்மணண். லக்ஷ்மணன் பெருமாளுக்கு எப்போதும் கைங்கர்யம் செய்யும்

நித்யஸூரிகளில் ஒருவரான, ஆதிசேஷனின் அம்சம் என்றும் கூறுவதுண்டு.

ஐந்து தலை உடைய ஆதிசேஷன் ஆனவன் திருமாலுக்கு எப்போதும்,

> "*சென்றால் குடையாம், இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம்*
>
> *, நீள்கடலுள் என்றும் புணையாம்"* (முதல் திருவந்தாதி, 53)

அதாவது ஆதிசேஷன் எப்போதும் ஏதாவது ஒரு வகையில் திருமாலுக்கு

சேவை செய்து கொண்டு இருப்பான். அதுபோலவே லக்ஷ்மணனும்

எப்போதும் ஸ்ரீ ராமருக்கு சேவை செய்து வந்தார்.

“***உன் அடியார்க்கு ஆட்படுத்தாய்***” என்பதற்கு
உரையாசிரியர் ,
ஆழ்வார் தம்முடைய திருநாமத்துக்கு ஏற்ப, பாகவத
கைங்கரியத்தை

வேண்டுகிறார் என்கிறார். இங்கே, சுவாமி நம்மாழ்வாரின்,
திருவாய்மொழியில் இருந்து

“***அடியார், தம்அடியார்,அடியார் அடியார் எம் கோக்கள்***”
***(8.10.10)*** என்ற

பாசுரத்தை நினைவு கூறலாம்.

நாலாயிர திவ்யப்ரபந்தத்தில், இந்த
திருப்பள்ளியெழுச்சிக்குப் பிறகு வருவது

அடுத்த ஆழ்வாரான திருப்பாணாழ்வார் அருளிய
அமலனாதிபிரான் என்ற

பிரபந்தம் ஆகும். அதை அவர்,
“அமலானாதிபிரான், ***அடியார்க்கு என்னை***

***ஆட்படுத்த விமலன்***” என்று தொடங்குவது இந்த
பிரபந்தத்தில் இருந்து

அடுத்த ப்ரபந்தத்திற்கு செல்லும் அந்தாதி வகை போல்
உள்ளது.

“***துடி இடையார் சுரி குழல் பிழிந்து உதறித் துகில்
உடுத்து ஏறினர்***”

என்று சொன்னது, கண்ணபிரானாகிய பெரியபெருமாளுக்கு
அந்த

காலத்து யமுனை ஆற்றங்கரையில், கோபியர்களின்
ஆடைகளை

அணிந்ததை நினைவுபடுத்தி, பெருமாளை உடனே கண்
வளர்ந்து

அருள பிரார்த்திக்கிறார்.

“***சூழ் புனல் அரங்கா***” என்றதற்கு, வைகுந்ததில் உள்ள விரஜா நதியையும்,

அயோத்தியின் சரயு நதியையும், கோகுலத்தின் யமுனா நதியையும் மறந்து

காவேரி நதி சூழுந்துள்ள அரங்கத்தில் உள்ள ஸ்ரீரங்கநாதனே என்று

சொல்வது மற்றொரு சிறப்பு.

தான் என்னும் அகங்காரத்தையும் ஆரவாரத்தையும் ஜீவாத்மாவிலிருந்து

எடுத்துவிட்டால், அதுவே ***அடியேன்*** என்று ஆகிறது என்பதை

விளக்கமாக உரையாசிரியர் சொல்லி முடிப்பது அருமை.

## ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச்செய்த - கண்ணிநுண் சிறுத்தாம்பு

இந்தப் பாசுரங்களைப் பற்றி ஓரிரு சுவாரசியமான செய்திகள் உண்டு. நாலாயிரம்

முழுவதும் பகவானைப் பற்றி, அவன் புரிந்த லீலைகளைப் பற்றி, அவன்

குணங்களைப் பற்றி பாடிய பாடல்கள்தான். அவை அவருடைய அவதார

பெருமைகளை பேசுகின்றன. ஆனால் இந்தக் கண்ணிநுண்சிறுத்தாம்பு

மட்டும் நம்மாழ்வார் பற்றிப் பாடும் பிரபந்தம். பேருக்கு ஓரிருமுறை

பகவானைப் பற்றி குறிப்புகள் வரும். மற்றது எல்லாம் நம்மாழ்வார்

எப்படி தன்னை தடுத்தாட் கொண்டார் என்று மதுரகவியாழ்வார் பாடியதுதான்.

ஆனால் ஆசாரிய பக்தியைச் சொல்லி அவர் மூலம் பகவானை அடைவதைப்

பற்றி சொல்லியபடியால் இதையும் நாலாயிரத்தில் சேர்த்தார்கள்.இந்தப்

பிரபந்தம் இல்லாவிடில் நமக்கு 4000 கிடைத்திக்குமா என்பதே

சந்தேகம்தான். ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் காலப்போக்கில்

மறைந்துவிட்டன.

ஒருமுறை நாதமுனிகள் என்னும் ஆச்சாரியர் தன் ஊர் கோவிலில்

"ஆரா அமுதே" என்று துவங்கும் திருவாய்மொழி (5-8) பாடல்களைக் கேட்டு

உருகினார். அதன் முடிவில் ஆயிரம் பாட்டுக்கள் பாடிய குறிப்பு

("ஓராயிரத்தில் இப்பத்தும்") வருகிறது. அதைப் பற்றி அந்தப் பாடல்களைப்

பாடியவர்களிடம் கேட்க அவர்களுக்குத் தெரியவில்லை.ஆகவே நாதமுனிகள்

இப்பாடல்கள் கிடைக்குமா என்று தேடிக் கொண்டு திருவரங்கம், பின்

குடந்தைக் கொவிலுக்குச் சென்று விசாரித்தார்.

அப்போது சில பெரியவர்கள் திருக்குறுங்குடி சென்று விசாரிக்கும்படி கூறினார்கள்.

அங்கு சென்று கேட்ட போது அவரை திருக்கோளூரில் வசிக்கும் மதுரகவி ஆழ்வா

ர் வம்சத்தவரிடம் விசாரிக்கும்படி கூறினர். அவர்களோ கண்ணிநுண் சிறுத்தாம்பு

என்னும் இந்த பிரபந்தத்தை பன்னிரண்டாயிரம் தடவை சொன்னால் நம்மாழ்வார்

உதவி செய்யலாம் என்று கூறவும் நாதமுனிகளும் அவ்வாறே செய்தார்.

அவருக்கு முழு பிரபந்தமும் கிடைப்பதற்குக் காரணம் இந்த கண்ணிநுண்சிறுத்தாம்பு

தானே! நம்மாழ்வார், நாதமுனிகள் ஆயிரம் பாடல்களைப் பற்றி கேட்கவும்

நம்மாழ்வார் தான் பாடிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை

அவருக்குக் கொடுத்தார். அது மட்டுமல்லாமல் ஏனைய

ஆழ்வார்கள் பாடிய பாடல்களையும் அவரிடம் தந்தாராம்.

நாதமுனிகள் தான் நாம் இப்போது பார்க்கும் பிரபந்தத்தை

முதலாயிரம், இரண்டாமாயிரம் என்று வகைப்படுத்தி கொடுத்தவர்.

அவருக்கு இது கிடைப்பதற்கு காரணம் எந்த கண்ணிநுண்சிறுத்தாம்பு தானே!

இப்போது இந்தப் பாடல்களின் பொருள்களைப் பார்க்கலாம்.

கண்ணி நுண் சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்

பண்ணிய பெரு மாயன் என் னப்பனில்

நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால்

அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே.(1)

சிறிய முடிச்சுகள் உள்ள சிறிய கயிறால் தானே விரும்பிக் கட்டுப்பட்ட கண்ணனின்

பெருமைகளை விட குருகூரில் வாழும் நம்மாழ்வாரின் பெருமைகளைச்

சொன்னால் நாவு இனிக்கும்.

நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்

மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே

தேவு மற்றறியேன் குருகூர் நம்பி

பாவின் இன்னிசை பாடித் திரிவனே.(2)

என் நாவினால் நம்மாழ்வார் புகழ் பாடி இன்பம் அடைந்தேன். அந்தத்

திருக்குருகூரில் வாழும் நம்பியை தவிர வேறு தெய்வத்தை நான் வேண்டேன்.

அவர் பாடிய திருவாய்மொழியைப் பாடிக்கொண்டே திரிவேன்.

சடகோபனைத் தவிர தனக்கு வேறு கடவுள் கிடையாது

என்கிறார் மதுரகவியாழ்வார்.

திரிதந்தாகிலும் தேவபிரானுடை

கரிய கோலத் திருவுருக் காண்பன் நான்

பெரிய வண்குருகூர் நகர் நம்பிக்கு ஆள்

உரிய னாய் அடியேன் பெற்ற நன்மையே.(3)

நம்மாழ்வார் சொன்னதனால் அங்கு எழுந்தருளியிருக்கும் கரிய, அழகான திருவுருவம்

கொண்ட பெருமாளை சேவித்தேன். மதுரகவி தானாகச் சென்று பெருமாளை

சேவிக்கும் மனம் இல்லாவிடினும் நம்மாழ்வார் சொன்னதன் பேரில்

சென்று பெருமாளைச் சேவிக்கிறார்.

நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்

புன்மையாகக் கருதுவர் ஆதலின்

அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும்

தன்மையான் சடகோபன் என் நம்பியே. .(4)

நான்கு வேதங்களையும் நன்கு கற்றறிந்தவர் என்னை இழிவாகக் கருதுவர்;

ஆனால் சடகோபன் அன்னையாகவும் தந்தையாகவும் இருந்து என்னை காப்பார்.

நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்

நம்பினேன் மடவாரையும் முன்னெல்லாம்

செம்பொன் மாடத் திருக்குருகூர் நம்பிக்கு

அன்பனாய் அடியேன் சதிர்த்தேன் இன்றே. .(5)

முன்பு பிறர் பொருட்களின் மேல் ஆசை பட்டேன்; பிற பெண்களையும் விரும்பினேன்.

ஆனால் இன்றோ ஆழ்வாருக்கு அடியவனாக இருக்கும் சாமர்த்தியம் வரப் பெற்றேன்.

இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான்

நின்று தன் புகழ் ஏத்த அருளினான்

குன்ற மாடத் திருக்குருகூர் நம்பி

என்றும் என்னை இகழ்விலன் காண்மினே.(6)

இன்றிலிருந்து ஏழேழ் பிறவிகளிலும் ஆழ்வாரின் புகழைப்

பாட எனக்கு அருள்செய்தார்.

ஆகவே அவர் என்னை இகழ்வது என்பது எக்காலத்திலும் இல்லை

என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

கண்டு கொண்டு என்னைக் காரிமாறப் பிரான்

பண்டை வல்வினை பாற்றி அருளினான்

எண் திசையும் அறிய இயம்புகேன்

ஒண் தமிழ்ச் சடகோபன் அருளையே.(7)

என் பழைய பாவங்களில் இருந்து காப்பாற்றிய ஆழ்வாரின் அருளை எட்டுத்

திக்குகளிலும் பரவும்படி செய்வேன்.

அருள் கொண்டாடும் அடியவர் இன்புற

அருளினான் அவ்வருமறையின் பொருள்

அருள் கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்

அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே.(8)

திருவாய்மொழி சாம வேதத்தை தமிழில் சொல்லுவது; ஆயிரம் பாடல்களால் ஆனது.

இவ்வாறு வேதத்தைத் தமிழில் அருளிச்செய்த ஆழ்வாரின் பெருமை மிகப்பெரியது.

மிக்க வேதியர் வேதத்திந் உட்பொருள்

நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்

தக்க சீர்ச் சடகோபன் என் நம்பிக்கு ஆட்

புக்க காதல் அடிமைப் பயனன்றே.(9)

வேதவிற்பன்னர்கள் பயிலும் வடமொழி வேதத்தை ஆழ்வார் தமிழில் பாடினார்.

அவர் திருவடியில் அடிமையாகத் தொண்டு செய்வதே என் வாழ்க்கைப் பயனாகும்.

**பயனன்றாகிலும் பாங்கலராகிலும்**

**செயல் நனறாகத் திருத்திப் பணி கொள்வான்**

**குயில் நின்றார் பொழில் சூழ் குருகூர் நம்பி**

**முயல்கின்றேன் உன்றன் மொய்கழற்கன்பையே(10)**

பிறர் திருந்துவதில் தனக்கு ஒரு பயனும் இல்லாவிடினும் அவர்களைத் திருத்துகிறார்

ஆழ்வார். அப்படிப்பட்ட ஆழ்வாரின் திருவடிகளில் தஞ்சமடைந்து

அன்பு உண்டாவதற்கு முயல்கிறேன்.

அன்பன் தன்னை அடைந்தவர்கட்கு எல்லாம்

அன்பன் தென்குருகூர் நகர் நம்பிக்கு

அன்பனாய் மதுரகவி சொன்னசொல்

நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே.(11)

பகவான் பக்தர்களிடம் அன்பு காட்டுகிறான். ஆழ்வாரோ அந்தப் பக்தர்களிடம்

பக்தி கொண்டார். மதுரகவி, பகவானிடம் பக்தி கொண்ட பக்தர்களிடம் பக்தி

கொண்ட ஆழ்வாரிடம் பக்தி கொண்டார். அவர் சொல்லுவதை

நம்புபவர்களுக்கு வைகுந்தம் நிச்சயம்.

இந்த வகையான பாடலுக்கு "பலச்ருதி" என்று பெயர். பெரும்பாலான

ஆழ்வார்களின் பாடல் தொகுப்பின் முடிவில் இப்படிப்பட்ட பாடல் இருக்கும்.

தொகுப்பை பாடுவதால் உங்களுக்கு என்ன நன்மை அல்லது பலன் கிடைக்கும்

என்று கூறுவது தான் "பலச்ருதி" பாடல்.

இந்தப் பாடல்களைப் பார்க்கும்போது வைகுந்தம் கிடைப்பது அப்படி ஒன்றும்

கடினமான காரியம் இல்லை போன்றே தோன்றுகிறது.

பகவானை ஆழ்வார் சரணடைகிறார். ஒன்று ஆழ்வாரை சரணடையுங்கள், இல்லை

ஆழ்வாரை சரணடைந்தவர்களை சரண் அடையுங்கள். இது போதும் வைகுந்தம் கிட்டுவதற்கு!